


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜூன் 7, 2018 | புரட்சி 17 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00

## ‘கச்சநத்தம்’ படுகொலை கண்டனக் கூட்டத்தில் கொளத்தூர் மணி பேச்சு

# ஜாதியை ‘மறந்து’ அல்ல; ஜாதியை ‘மறுத்து’த் தமிழராக வேண்டும்

***‘சமூக நல்லிணக்கம்’ என்ற போர்வையில் தமிழர் ஓர்மைப் பேசாமல் ஜாதி ஒழிப்புத் தளத்தில் ஓர்மையை உருவாக்க வேண்டும் என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.***

தமிழ்நாடு கலை இலக்கிய ஊடக செயற் பாட்டாளர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பில் சிவகங்கை கச்சநத்தம் ஜாதிவெறிப் படுகொலையைக் கண்டித்து கண்டனக் கூட்டம் சென்னை மேற்கு மாம்பலம் வி.கே.எம். மகாலில் ஜூன் 3, 2018 அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தொல். திருமாவளவன், தீண்டாமை ஒழிப்பு முன்னணிப் பொறுப்பாளர் சாமுவேல் ராஜ், மனுஷ்யபுத்திரன், இயக்குநர் அமீர், வெற்றி மாறன், எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணன், சீனு ராமசாமி, மீரா கதிரவன், வழக்கறிஞர் அருள்மொழி, நவீன், மதிவண்ணன், கிரேஸ் பானு, மருத்துவர் ஷாலினி, யாழன் ஆதி, பா. இரஞ்சித், வழக்கறிஞர் ராஜகுரு, லெனின் பாரதி உள்ளிட்ட பலரும் உரையாற்றினர்.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரையிலிருந்து:

ஜாதியை எப்படி ஒழிப்பது - வலுவிழக்கச் செய்வது என்பது குறித்து இங்கே பல்வேறு கருத்துகள், விவாதங்கள் முன் வைக்கப்பட்டன. சாக்கடைக்குப் பக்கத்திலே இருப்பவனை கொசு கடிக்காமல் விடாது என்பதுபோல் இந்து மதத்துக்குள் இருப்பவனை ஜாதி கடிக்கவே செய்யும். இப்போது ஜாதி ஒழிப்புக் குறித்து நான் சில கருத்துகளை முன் வைக்க விரும்புகிறேன். ஜாதிப் படுகொலைகள் நடக்கும்போது, அதற்கான எதிர்வினையாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்; அதே நேரத்தில் ஜாதி ஒழிப்பு என்ற இலக்கில் ஜாதியை கட்டமைக்கும் கருத்தியலுக்கு எதிரான இயக்கம்; மூன்றாவதாக தீண்டாமை ஒழிப்புக்கான காப்பரண்களாக உள்ள சட்டங்கள் நீர்த்துப் போகாமல் பாதுகாத்தல் - என்ற மூன்று தளங்களில் நாம் வேலைத் திட்டங்களை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழ் தேசியம் உருவாகும்போது ஜாதி ஒழிந்து விடும் என்று கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். நாம் ஜாதியமைப்பு பலவீனமாகும்போதுதான் தமிழ் தேசியமே முளைக்கும் என்ற கருத்துடையவர்களாக இருக்கிறோம்.

அரசியல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்து பேசிய அம்பேத்கர், அதன் முகப்புரையில் ‘We the people of India’ (இந்திய மக்களாகிய நாம்) என்று கூறியபோது ‘இந்திய தேசத்தவராகிய நாம்’ என்று கூறக் கூடாதா என்று கேட்டார்கள். அம்பேத்கர் அப்போது சொன்னார்: இன்னும் நாம் ஒரு தேசமாகவே உருவாகவில்லை; இனிதான் ஒரு தேசமாக உருவாக வேண்டும் (yet to be a nation) என்று கூறிவிட்டு, பல்லாயிரம் ஜாதிகளாகக் கொண்ட இந்த நாடு எப்படி ஒரு தேசமாக முடியும் என்று கேட்டார். தேசத்துக்கு எதிரானது ஜாதி என்றார் (Caste is anti-national). இன்று எதை எதையோ தேச விரோதம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜாதி அமைப்பு பலவீனமடைந்துவிடக் கூடாது என்பதில் சில ஜாதியவாதிகள் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். தன்னைத்தானே உந்துவிசையில் ஒரு சக்கரம் சுற்றிக் கொண்டே இருக்கும்போது அதன் வேகம் குறைகிறபோது அதற்கு விசை கொடுத்து வேகமாக சுழலச் செய்வதுபோல் இப்போது இடை நிலைச் சாதியைச் சார்ந்த ஜாதி ஆதரவாளர்கள் அவ்வப்போது ஜாதி வெறியைத் தூண்டி வருகிறார்கள்.

ஒரு காலத்தில் கிராமத்தில் ஜாதி கட்டமைப்பைக் காப்பாற்றி வந்த பார்ப்பனர்கள், இப்போது கிராமங்களை விட்டு வெளியேறிவிட்டார்கள். அவர்களிடமிருந்து நிலங்களைக் கைப் பற்றிக் கொண்ட இடை நிலை ஜாதியினர், நிலத்தோடு, பார்ப்பனர்கள் வைத்திருந்த ஜாதி அதிகாரத்தையும் அவர்களிடமிருந்து எடுத்துக் கொண் டார்கள். பார்ப்பனர் களிடம் இல்லாத ‘உடல் வலிமையும்’ இவர்களுக்கு இருக்கிறது. இவர்கள்தான் ஜாதி அமைப்பைக் கட்டிக்காக்க வன்கொடுமைகளையும், கொலைகளையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.



ஜாதி அமைப்பை அப்படியே பாதுகாத்துக் கொண்டு மேலோட்டமாக ஜாதியை மறந்து ஒன்றுபட வேண்டும் என்ற ஒரு கருத்து ‘சமூக நல்லிணக்கம்’ என்ற பெயரில் முன்வைக்கப்படுகிறது. பார்ப்பன மேலாண்மையை உயர்த்திப் பிடிக்கும் ஆர்.எஸ்.எஸ். ‘சமாஜிக் சமரஸ்தா’ என்ற ஒரு துணை அமைப்பை உருவாக்கியுள்ளது. தமிழில் இதைச் சொல்ல வேண்டுமானால், ‘சமூக நல்லிணக்கப் பேரவை’ ஜாதியை அப்படியே பாதுகாத்துக் கொண்டு நல்லிணக்கத்தோடு இருப்போம் என்பதே இந்த அமைப்பின் நோக்கம். அத்தகைய நல்லிணக்கம் நமக்குத் தேவையில்லை. “ஜாதியை மறந்து தமிழராக இணைவோம்; வீட்டுக்குள் போகும்போது ஜாதியை வைத்துக் கொள்வோம்” என்ற இந்த கருத்து ஆபத்தானது. ஜாதியை மறந்துவிட்டு தமிழராகக் கூடாது; ஜாதியை மறுத்துவிட்டுத் தமிழராக வேண்டும். ‘சமாஜிக் சமரஸ்தா’ என்று மோடியே ஒரு நூலை நல்லிணக்கம் குறித்து எழுதினார். இராமன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டியதே பீகாரைச் சார்ந்த காமேஸ்வர் சௌபால் என்ற ஒரு தலித். இதுவே சமூக நல்லிணக்கம் என்றார் மோடி. தலித் வீட்டில் போய் சாப்பிடுவதாகக் கூறுவதுபோல் இதுவும் ஏமாற்று மோசடி. ‘சமூக நல்லிணக்கம்’ என்ற சொல்லையே நாம் பயன்படுத்தாமல் இருப்பதே நல்லது.

ஜாதி - ஒரு பாதுகாப்பு அரணாக செயல்படுகிறது. ஜாதியைச் சார்ந்த குடும்பங்களுக்கு நெருக்கடி உதவி தேவைப்படும்போது உடன்வந்து உதவக் கூடியதாக ஜாதி உறவுகள இருப்பதும், ஜாதிக்கான ஒரு பாதுகாப்பாக இருக்கிறது. ஜாதியை எதிர்க்கும் நாம், ஜாதி எதிர்ப்பு ஜனநாயக சக்திகளுக்கு நெருக்கடி உதவி என்றால் அவர்கள் கேட்காமலேயே ஓடிச் சென்று உதவிட முன் வரும்போது ஜாதி தான் சமூகப் பாதுகாப்பு தரும் என்ற நிலையை மாற்றியமைக்க முடியும்.

அம்பேத்கர் ஜாதி ஒழிப்பு குறித்த தனது லாகூர் உரையில், ஜாதி என்பது செங்கல் சுவர்; முள்வேலி போன்ற ஒரு பொருள் அல்ல; அது ஒரு மனநிலை; கருத்தியல் என்று கூறுவார். வரலாற்றிலிருந்து ஒரு உதாரணத்தையும் எடுத்துக் காட்டினார். ரோமில் நடந்த நெடிய போராட்டத்திற்குப் பின் உழைக்கும் மக்களுக்கும் பிரபுகளுக்கும் உடன்பாடு ஏற்பட்டு அதிகாரத்தை சம எண்ணிக்கையில் பகிர்ந்து கொண்டார்கள். அப்போது ஒரு விதியை சேர்த்தார்கள். ஆட்சித் தலைவராக வரக் கூடியவர்கள் பிரபுக்களின் கடவுளான ‘டெல்ஃபி’ கடவுளின் பூசாரியிடம் எந்த முடிவு என்றாலும் ஒப்புதல் பெற வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள். உழைக்கும் மக்கள் தங்கள் கடவுள் நம்பிக்கையால் இதை ஏற்றுக் கொண்டார்கள். அந்தக் கோயில் பூசாரியின் முடிவு உழைக்கும் மக்களுக்கு எதிராகவும், பிரபுக்களுக்கு ஆதரவாகவும் இருந்தது. பல நூற்றாண்டு காலம் உழைக்கும் மக்கள் போராடி பெற்ற உரிமைகளை ஒரு ‘நம்பிக்கை’ சிதைத்து நொறுக்கியது என்று அம்பேத்கர் கூறினார்.

வர்ணாஸ்ரம அமைப்பும் அதன் வழியாக உருவான ஜாதியமைப்பையும் நியாயப்படுத்த சாஸ்திரங்கள், புனித நூல்கள் கற்பிக்கப்பட்டன. இவைகளின் அதிகாரங்களை மறுக்க வேண்டும் என்றார் அம்பேத்கர். இந்த அதிகாரங்களை பார்ப்பனர்களே எழுதிக் கொண்டார்கள். அவர்களே வரையறுத்துக் கொண்டார்கள். எழுதப்பட்ட வரலாறுகள் எல்லாம் உண்மையான வரலாறு அல்ல; சிங்கத்தை வேட்டையாடிய வேட்டைக்காரர்கள் தான். வரலாறுகளை எழுதினார்கள். வேட்டையாடப்பட்ட சிங்கம் வரலாறு எழுதினால், அது வேறு வரலாறாகத்தான் இருக்கும். எனவே ஜாதியைக் காப்பாற்றும் கருத்தியல்களான சாஸ்திரம், புராணம், இதிகாசம், புனித நூல்களை எதிர்க்கும் இயக்கம் - ஜாதி ஒழிப்புக்கான இலக்கை அடைவதற்கு மிகவும் அவசியமாகிறது.

தீண்டாமை ஒழிப்புக்காக காப்பரண்களாக இருக்கும் சட்டங்களையும் நீர்த்துப் போகாமல் பாதுகாக்க நாம் போராட வேண்டியிருக்கிறது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பால் நீர்த்துப் போகச் செய்யப் பட்டிருக்கிறது. தன்னை - ‘தீண்டப்படாதவர்’ என்ற காரணத்தால் பழிவாங்கிய அதிகாரி மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர அனுமதி கேட்டார் பாஸ்கர் கெய்க்வாட் என்ற தலித் ஊழியர். பம்பாய் உயர்நீதிமன்றம் அவரை அனுமதிக்க வேண்டும் என்று கூறி குற்றம் சாட்டப்பட்டவர்மீது வழக்குப் பதிய அனுமதித்தது.

மேல் முறையீட்டில் உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் வழக்குத் தொடரவே உயர் அதிகாரி ஒப்புதல் வேண்டும் என்று கூறிவிட்டனர். உச்சநீதிமன்றத்துக்கு வழக்கைக் கொண்டு சென்றவர் டாக்டர் மகாஜன் என்ற தொழில் கல்வி இயக்குனர். உயர் அதிகாரிகள் ஒப்புதல் தரவில்லை என்பதுதான் பாதிக்கப்பட்ட ‘தலித்’தின் வழக்கு வழக்கு. வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றமோ, அதிகாரிகள் ஒப்புதலைப் பெற்று வழக்காட வா என்று கூறுகிறது.

நீதிபதிகளாக வரக் கூடியவர்கள் போராடத் தேவையே இல்லாத சமூகத்திலிருந்து வருகிறார்கள். எனவேதான் அவர்கள் போராடக் கூடாது; கூட்டம் நடத்தக் கூடாது; ஊர்வலம் போகக் கூடாது என்று தீர்ப்பளிக்கிறார்கள். நாம் போராடித்தான் உரிமைகளைப் பெற வேண்டிய நிலையில் இருப்பவர்கள். அப்படிப் போராடித்தான் உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். தான் கொண்டு வந்த இந்துச் சட்ட மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாமல் முடக்கியபோது அம்பேத்கர் கூறினார்: “மசோதாவை அழுகை இல்லாமல், சடங்குகள் இல்லாமல் கொன்று புதைத்து விட்டார்கள்” என்றார். அதுதான் இப்போது வன்கொடுமை தடுப்புச் சட்டத்திலும் நடந்திருக்கிறது.

தொகுத்துச் சொல்வது என்றால் ஜாதி ஒழிப்புக்கான செயல்திட்டங்களாக வன்கொடுமை களுக்கு எதிர்வினையாற்றுவது - ஜாதியமைப்பை நியாயப்படுத்தும் கருத்தியலுக்கு எதிராக இயக்கம் நடத்துவது; தீண்டாமை ஒழிப்புக்கான சட்டங்களை நீர்த்துப் போகாமல் பாதுகாப்பது; மேலும் வலிமையான சட்டங்களைக் கொண்டுவரப் போராடுவது என்ற தளங்களில் நமது செயல் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சொந்த ஜாதியில் படுகொலைகள், வன்முறைகள் கருத்துரிமைப் பறிப்புகள் நடக்கும்போது ஜாதி எதிர்ப்பாளர்கள் ‘மவுனம் சாதிக்காமல், பொது வெளியில் அதற்கு எதிர்ப்புகளைப் பதிவு செய்ய வேண்டும். திருச்செங்கோட்டில் பெருமாள் முருகனுக்கு ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் அவரது நூலுக்கு எதிர்ப்பு தெரிவித்தபோது அதே ஜாதியைச் சார்ந்த ஒரு மருத்துவர் சொந்த ஜாதியினரின் நடவடிக்கைகளைத் துணிவுடன் கண்டித்தார். இந்த முன்னுதாரணத்தை ஜாதிய எதிர்ப்பாளர்கள் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம் என்றார் கொளத்தூர் மணி.

**– நமது செய்தியாளர்**

## கர்ப்பகிரகத்துக்குள் சிலையாக நுழைந்தான் 'இராஜராஜன்'

தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய இராஜராஜ சோழன், அவனது மனைவி உலகமாதேவி ஆகியோரின் அய்ம்பொன் சிலைகள் 60 ஆண்டுகளுக்கு முன் கோயிலிலிருந்து திருட்டுப் போனது. இப்போது குஜராத்திலுள்ள தனியார் அருங்காட்சியகத்திலிருந்து (அகமதாபாத் - சாராபாய் பவுண்டேஷன் காலிகோ அருங்காட்சியகம்) மீட்கப்பட்டு தஞ்சைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டுக் கோயில்களிலிருந்து திருடப்பட்ட சிலைகளையெல்லாம் பத்திரமாக மீட்டுத் தரும் வேலையை சிறப்பாக செய்து வருகிறார், சிலைக் கடத்தல் தடுப்புக் குழு தலைமை காவல் அதிகாரி (அய்.ஜி.) பொன். மாணிக்கவேல் அவரது குழுவினர் ஒத்துழைப்புடன்! கண்டுபிடித்து மீட்டுவரும் இவர்கள் ஆகமமுறைப்படி சிலைகளுக்கு அருகே நெருங்கக் கூடாதவர்கள்; "சூத்திரர்கள்". இந்த சிலையை 60 ஆண்டுகளுக்கு முன் திருடுவதற்குத் திட்டம் தீட்டித் தந்து, அதை விற்பதற்கு தரகராக செயல்பட்டது யார் என்றால், சீனிவாச கோபாலாச்சாரி என்ற பார்ப்பனர். தஞ்சை கோயில் 'ஆகம விதிப்படி' பகவானுக்குரிய கடமைகளை செய்து வரும் "பிராமண அர்ச்சகர்" உதவியோடுதான் இந்த திருட்டு நடந்திருக்கிறது. ஆகமத்தில் அர்ச்சகர் சிலை திருட்டுக்கு உதவலாம் என்று கூறப்பட்டிருக்கிறது போலும்!

மீட்கப்பட்ட இரண்டு சிலைகளின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.150 கோடி. அருங்காட்சியகத்திலும் காவல்துறை கரங்களிலும் பட்டு 'தீட்டாகி' விட்ட சிலைகள் தில்லை தீட்சதர்களாலும் திருவையாறு 'வடகயிலாயம்' கோயில் அர்ச்சகர்களாலும் 'வேத மந்திரம்' ஓதி தீட்டுக் கழிக்கப்பட்டு மீண்டும் தஞ்சை கோயிலுக்கு பூர்ண கும்ப மரியாதையுடன் வந்து சேர்ந்திருக்கிறது.

"3 மாதங்களில் சிலைகளை நாங்கள் மீட்டிருக்கிறோம். இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு 100 வயதாக இருந்தாலும் சரி; கைது செய்து சிறையில் அடைப்போம்" என்று கூறியிருக்கிறார் அய்.ஜி. பொன். மாணிக்கவேல்.

இந்த இராஜராஜன் அவரது மனைவி சிலைகளை நிறுவ முடிவெடுத்து இராஜராஜனின் படைத்தளபதி மும்முடிச் சோழ பிரம்மராயன் கோயில் கருவறைக்குள்ளேயே வைத்தான். அப்போது 'ஆகம விதிக'ளைக் கூறி வைதிகப் பார்ப்பனர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை போலும்.

இப்போது மீட்டுக் கொண்டு வரப்பட்ட சிலைகள் மீண்டும் 'கர்ப்பகிரகத்துக்குள்ளேயே' வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த செய்தியை பல நாளேடுகள் மறைத்து விட்டாலும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு மட்டும், "Reinstalled in Sanctum Sanctorum" என்று செய்தி வெளியிட்டுள்ளது. அதேபோல சிலையைத் திருடியது சீனிவாச கோபாலாச்சாரி என்ற வைதிகப் பரம்பரையில் வந்த பார்ப்பனர்தான் என்ற செய்தியையும் பல ஏடுகள் வெளியிடவில்லை.

இராஜராஜசோழனுக்கு விழா எடுத்த தமிழக முதல்வர் கலைஞர், இராஜராஜனுக்கு ஒரு சிலை செய்து அதை கோயிலுக்குள் வைக்க முயற்சித்தபோது மத்திய தொல்பொருள் துறை கோயில் கட்டிய 'சூத்திர' மன்னன் சிலையை கோயிலுக்குள்ளேயே வைக்க அனுமதி மறுத்துவிட்டது. அதனால் அன்றைய முதல்வர் கலைஞர் கோயிலுக்கு வெளியே வாசலில் அந்த சிலையை நிறுவுகிறேன் என்று எதிர்வினையாற்றும் வகையில் வாயிலில் சிலையை வைத்தார். அந்த வெண்கலச் சிலை இப்போதும் தஞ்சை கோயில் வாசலில்தான் நிற்கிறது.

மீட்கப்பட்ட இராஜராஜன் அவனது மனைவி சிலைகளின் மதிப்பு 150 கோடி ரூபாய் என்பதால் மீண்டும் கர்ப்பகிரகம் போய்விட்டது. ஆக சூத்திர மன்னன் சிலையாக கர்ப்பகிரகத்துக்குள் நுழைந்து விட்டான்; ஆனால் 'சூத்திரர்கள்' மட்டும் அந்த கர்ப்பகிரகத்துக்குள் நுழைய முடியாது. இதுதான் இப்போது பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் வழியாகப் பெற்று வைத்திருக்கும் பிறவி அதிகார உரிமை!

அது மட்டுமல்ல; சிலையைத் திருடிய ஆச்சாரி பரம்பரை மட்டும் ஆகம விதிப்படி கர்ப்பகிரகத்துக்குள் நுழைய முடியும். சிலையை மீட்டெடுத்த 'பொன் மாணிக்கவேல்' சூத்திர பரம்பரை - உரிய பயிற்சி பெற்றிருந்தாலும் கர்ப்பகிரகத்துக்குள் நுழைந்து விட முடியாது. சிலையை அரும்பாடுபட்டு மீட்டு வந்த காவல்துறை, 'பிராமண அர்ச்சகர்களிடம்' சல்யூட் அடித்து கோயிலுக்கு வெளியே ஒப்படைப்பதோடு அவர்களின் அதிகாரம் முடிந்து விட்டது.

இந்தியாவின் குடியரசுத் தலைவரையே அவர் 'தலித்' என்பதால் கோயிலுக்குள் இப்போதும் விட மறுக்கிறார்கள் பார்ப்பனர்கள். குடியரசுத் தலைவர் அதிகாரத்தைவிட அர்ச்சகர் பார்ப்பனர்களின் அதிகாரம் வலிமையானது; இதுதான் இந்தியா; இதுதான் பாரதம்!

# கடுவனூரில் குழந்தைகள் பழகுமுகாம்



திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக விழுப்புரம் மாவட்டம் கடுவனூரில் மாவட்ட அறிவியல் மன்ற அமைப்பாளர் மு.நாகராசன் தலைமையில் குழந்தைகள் பழகு முகாம் நிகழ்ச்சி நடத்தப்பட்டன.

இயக்கத் தோழர் அய்யனார் நிலத்தில் 23.05.2018 புதன்கிழமை அன்று பந்தல் அமைத்து நிகழ்ச்சி நடத்தப்பட்டன. 5 ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்புவரை (ஆண், பெண்) 90 மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சியாளராக தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி வருகை புரிந்து பயிற்சி அளித்தார். சிவகாமி மகள் கனல், காலை முதல் மாலை வரை பேய், பிசாசு, கடவுள், மதம் போன்ற பொய்யானவைகளை விளக்கியும் உலகம் எப்படி தோன்றியது உயிர் எப்படி தோன்றியது போன்ற அறிவியல் - விஞ்ஞானம் சார்ந்தவைகளை பற்றியும் விளக்கமாக மாணவர்களுக்கு கற்பித்தனர். பழகுமுகாமில் பெரியாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் பொய்யான சாதி, மதம், கடவுள் சார்ந்த சிறு நாடகங்களை மாணவர்கள் நடத்தியது சிறப்பாக இருந்தன. இறுதியில் மாணவர்கள் பலரும் சிவகாமி ஆசிரியரிடம் பல அறிவுசார்ந்த கேள்வி கேட்டதோடு பழகுமுகாமில் கலந்துகொண்டது மிகவும் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்ததாக மாணவர்கள் கூறினார்கள். மேலும் இந்த பழகு முகாம் அடுத்த கோடை விடுமுறையில் நடத்துகின்ற போது இரண்டு நாட்கள் நடத்துங்கள் என்றும், இரண்டு நாட்கள் நடத்துகின்றபோது பல்வேறு துறைகள் பற்றி விரிவாக தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்றும் கூறினார்கள். நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு தேனீர், மிக்சர் வழங்கப்பட்டன. மதியம் இறைச்சி உணவு வழங்கப்பட்டன. இறுதியாக இராமர் நன்றியுரை கூறி நிகழ்ச்சியை முடித்து வைக்கப்பட்டன.

# 4139 சட்டமன்ற உறுப்பினர்களில் பா.ஜ.க. எண்ணிக்கை 1516 மட்டுமே

இந்தியா முழுமையும் பா.ஜ.க. பிடிக்குள் வந்திருப்பதாக ஒரு பொய்யான தோற்றத்தை அக்கட்சி உருவாக்கி வருகிறது. உண்மையில், இந்தியாவின் 29 மாநிலங்களில் உள்ள 4139 சட்டமன்ற உறுப்பினர்களில் பா.ஜ.க.வின் எண்ணிக்கை 1516 மட்டும்தான். அதுவும் பெரும்பாலான 950 சட்டமன்ற உறுப்பினர்கள் குஜராத், மகாராஷ்டிரா, கருநாடகம், உ.பி., ம.பி., இராஜஸ்தான் என்ற 6 மாநிலங்களில் மட்டும் இருக்கிறார்கள். 10 மாநிலங்களில் மட்டுமே பா.ஜ.க. மெஜாரிட்டி பலத்துடன் ஆட்சியில் இருக்கிறது. மாநிலங்கள் வாரியாக பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களின் விவரம்:

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு | - | ஒருவர்கூட இல்லை |
| சிக்கிம் | - | ஒருவர்கூட இல்லை |
| மிசோராம் | - | ஒருவர்கூட இல்லை |
| ஆந்திரா | - | 175 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க. 4 பேர் |
| கேரளா | - | 140 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க. ஒருவர் மட்டும் |
| பஞ்சாப் | - | 117 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க. 3 பேர் |
| மேற்கு வங்கம் | - | 294 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க. 3 பேர் |
| தெலுங்கானா | - | 119 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க. 5 பேர் |
| டெல்லி | - | 70 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க. 3 பேர் |
| ஒடிசா | - | 147 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க.10 பேர் |
| நாகலாந்து | - | 60 எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க.12 பேர் |

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கும் மாநிலங்களில் என்ன நிலை?

மேகலாயாவில் 60 சட்டமன்ற உறுப்பினர்களில் 2 இடங்களை மட்டுமே பெற்றுள்ள பா.ஜ.க.- கூட்டணி ஆட்சி நடத்துகிறது.

பீகாரில் 243 சட்டமன்ற உறுப்பினர்களில் 53 இடங்களை மட்டுமே பெற்றுள்ள பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இடம் பிடித்துள்ளது.

கோவாவில் 40 எம்.எல்.ஏ.க்ககளில் 13 இடங்களைப் பெற்றுள்ள பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடத்துகிறது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் 87 இடங்களில் 25 இடங்கள் மட்டுமே பெற்று பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இடம் பிடித்திருக்கிறது.

பா.ஜ.க. ஆட்சியில் உள்ள உ.பி, இராஜஸ்தான் மாநிலங்களில் நடந்த இடைத் தேர்தல்களில் பா.ஜ.க. கடும் தோல்வியையே சந்தித்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சியிருந்த கர்நாடகாவில் பா.ஜ.க.வுக்கு நடந்து முடிந்த தேர்தலில் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இந்தியா முழுவதையும் பா.ஜ.க. பிடித்து வருகிறது என்று தம்பட்டமடிப்பது அப்பட்டமான பொய்!

## ஏற்காட்டில் பெரியாரியல் பயிலரங்கம்

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஜூன் 23, 24 தேதிகளில் ஏற்காட்டில் பெரியாரியல் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், பால் பிரபாகரன், பேரா. சுந்தரவள்ளி, வீரா கார்த்திக், வகுப்புகளை எடுக்கிறார்கள்.

பயிற்சிக் கட்டணம் ரூ.100/- முன் பதிவு அவசியம்.

தொடர்புக்கு: ஃபிடல் செகுவேரா, இராசிபுரம்.

பேசி: 9788593863

# கழக மாநாட்டில் திருமுருகன் காந்தி பேச்சு

# காவிரி உரிமையில் வஞ்சிக்கப்படுகிறோம்

*ஏப்ரல் 30, 2018 அன்று தோழர் பத்ரி நாராயணனின் 14ஆவது நினைவு நாளையொட்டி சென்னை, இராயப்பேட்டையில் நடந்த நிலம் பாழ்-நீர் மறுப்பு - நீட் திணிப்பு, தன்னாட்சி-தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி 'நீர் மறுப்பு' என்ற தலைப்பில் ஆற்றிய உரை.:*

நமக்கு நிலம் பாழ்பட்டிருக்கிறது, நீர் மறுக்கப்பட்டிருக்கிறது, நீட் திணிக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீர் மறுப்பைப் பற்றி என்னுடைய கருத்துக்களை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழ்நாட்டுக்கான நீர் மறுப்பு என்பது இந்திய அரசுடைய சதித் திட்டமாகத்தான் ஒட்டுமொத்த தரவுகளையும் பார்க்கும்போது நாம் உணர முடியும். இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு என்பது நீர்ப் பற்றாக்குறை உள்ள ஒரு மாநிலமாக உள்ளது. வற்றாத நதியான காவிரியிலிருந்து ஒரு பகுதி நீர் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. காவிரி நீர் உரிமை தொடர்பாக வெள்ளைக்காரார் ஆட்சிக் காலத்தில் அன்றைய மைசூர் மாகாண அரசுக்கும், சென்னை மாகாண அரசுக்கும் முதல் ஒப்பந்தம் 1892ஆம் ஆண்டில் போடப்படுகிறது. அப்போதே காவிரியில் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றால் அதற்கு சென்னை மாகாண அரசிடமும் ஒப்புதல் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதற்குப் பிறகு 1924ஆம் ஆண்டில் அங்கே கிருஷ்ணராஜ சாகர் அணையும், இங்கே மேட்டூர் அணையும் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது இரண்டு அரசுகளும் பேசின. அப்போது கர்நாடகாவில் 1,10,000 ஏக்கரும், தமிழ்நாட்டில் 14 இலட்சம் ஏக்கரும் பாசனப் பரப்பாக இருந்தது. அதன் அடிப்படையில் எவ்வளவு நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து ஒப்பந்தத்தில் இரு அரசுகளும் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தம் 50 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்குமென்றும், அதன்பிறகு மறுபரிசீலனை செய்து கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் காவிரிப் பாசனப் பரப்பு பாதிக்கிற வகையில் எந்தவொரு திட்டத்தையும் கொண்டுவரக் கூடாது என்பது 1924 ஒப்பந்த விதி. இந்த 1924ஆம் ஆண்டிலிருந்து சட்ட விரோதமாக கர்நாடகா காவிரியின் குறுக்கே அணை கட்டிய காலம் வரையில் சராசரியாக நமக்குக் கிடைத்த தண்ணீரின் அளவு ஒரு ஆண்டுக்கு 370 முதல் 380 டி.எம்.சி.யாக இருந்தது. ஆனால் 1970ஆம் ஆண்டுவாக்கில் கர்நாடகா காவிரியின் குறுக்கே ஹேமாவதி, ஹாரங்கி அணைகளைக் கட்டிய பிறகு தமிழ்நாட்டுக்கு கிடைத்த காவிரித் தண்ணீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டது.

தண்ணீரின் தேவையை உணர்ந்து விவசாயிகள் வழக்குப் பதிவு செய்த பிறகு தீர்ப்பாயம் இடைக்காலத் தீர்வாக 205 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டுக்கு வழங்க உத்தரவிடுகிறது. 1980-1990 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 10 ஆண்டுகளில் தமிழ்நாடு காவிரியில் பெற்ற அதிகபட்ச 2 ஆண்டுகள் மற்றும் குறைந்தபட்ச 2 ஆண்டுகள் போக எஞ்சிய 6 ஆண்டுகளின் சராசரியை கணக்கிட்டு இந்த இடைக்காலத் தீர்ப்பை வழங்கியிருந்தார்கள். ஆனால் இந்த 205 டி.எம்.சி. என்பது கர்நாடகம் சட்ட விரோதமாக ஐந்து அணைகளைக் கட்டிய பிறகு, தமிழ்நாட்டுக்கு வந்த தண்ணீரின் அளவைத் தடுத்து குறைத்துவிட்ட பிறகு, அந்த சராசரியை கணக்கிட்டு வழங்கியதுதானே தவிர 1974ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த தண்ணீரின் அளவு அல்ல.

கிருஷ்ணராஜ சாகர் அணையும், மேட்டூர் அணையும் கட்டப்பட்ட பிறகு. இன்னும் சொல்லப் போனால் மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டுக்குள் காவிரி பாய்ந்த அளவைத்தான் தீர்ப்பாயம் கணக்கில் எடுத்திருக்க வேண்டும். ஆனால், சட்ட விரோதமாக ஐந்து அணைகளைக் கட்டிய பிறகு வந்த தண்ணீரின் அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டது நமக்கு இழைக்கப்பட்ட முதல் அநீதி. இந்த 205 டி.எம்.சியும் 2007ஆம் ஆண்டு இறுதித்தீர்ப்பில் 192 டி.எம்.சியாக குறைந்தது. 192 டி.எம்.சி. இப்போது 177.25 டி.எம்.சியாகக் குறைந்துவிட்டது. ஆனால் 1924ஆம் ஆண்டில் மைசூர் மாகாணம் காவிரியில் பெற்ற தண்ணீரின் அளவு 177 டி.எம்.சி. அப்போது சென்னை மாகாணம் பெற்ற தண்ணீர் 490 டி.எம்.சி. இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அன்று கர்நாடகம் எவ்வளவு தண்ணீரைப் பெற்றதோ அவ்வளவு தண்ணீரை உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டுக்கு இன்று வழங்கியிருக்கிறது என்றால் எவ்வளவு பெரிய அநீதி நமக்கு நிகழ்த்தப்பட்டிருக்கிறது?



ஏற்கெனவே தமிழ்நாடு தண்ணீர் குறைந்த மாநிலமாகவும், மழை குறைந்த மாநிலமாகவும் இருக்கிறது. பெரிய நீர் ஆதாரங்களும் நம்மிடம் இல்லை. இந்தச் சூழலில் காவிரியில் தண்ணீர் குறைக்கப்பட்டது என்பது தமிழ்நாட்டுக்கு திட்டமிட்டு இழைக்கப்பட்ட சதி. 1924ஆம் ஆண்டில் காவிரியை நம்பியிருந்த தமிழ்நாட்டின் பாசனப் பரப்பு 14 லட்சம் ஏக்கர். இப்போது 29 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. ஆனால் இங்கு இருக்கக் கூடிய பார்ப்பனப் பத்திரிகைகள் ஒவ்வொரு முறை எழுதும்போதும் 'தமிழ்நாட்டிலே பாசனப் பரப்பு கட்டுக்கடங்காமல் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. தண்ணீரை அதிகம் குடிக்கக் கூடிய பயிர்கள் இங்கே பயிரிடப்பட்டிருக்கிறது. அதனால்தான் தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுகிறது. தமிழ்நாடு பேராசைப்படுகிறது' என்கிறார்கள். ஆனால் உண்மை நிலை, கர்நாடகம் 1924ஆம் ஆண்டிலிருந்த லட்சம் ஏக்கர் பாசனப் பரப்பை இப்போது 24 லட்சம் ஏக்கர்களாக அதிகரித்திருக்கிறது. இந்தக் கணக்கை அவர்கள் பேசுவதில்லை. கடந்த வருடம் தமிழ் இந்து பத்திரிக்கையிலே ஒரு கட்டுரை எழுதப்பட்டது. காவிரியில் தண்ணீர் கேட்கத் தமிழனுக்கு உரிமை இருக்கலாம், ஆனால் தகுதி இருக்கிறதா. தமிழ்நாட்டில் நீர் சேகரிப்புப் பணிகளை சரியாகச் செய்யவில்லை என்று அந்த கட்டுரையில் எழுதுகிறார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதற்காக எங்கள் உரிமைகளை நாங்கள் மறுத்துவிட முடியாது.

> **மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டுக்குள் காவிரி பாய்ந்த அளவைத்தான் தீர்ப்பாயம் கணக்கில் எடுத்திருக்க வேண்டும்.**

பல்வேறு தகவல்களையும் இவர்கள் மறைத்துத்தான் இப்படி எழுதுகிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அணைகளில் தேக்கப்பட்டிருக்கிற தண்ணீரின் அளவு என்பது கிட்டத்தட்ட 180 டி.எம்.சி.யாக உள்ளது. இதில் காவிரியிலிருந்து மட்டும் நமக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு 120 டி.எம்.சி. கிட்டத்தட்ட இரண்டு பங்கு தண்ணீரைக் காவிரிதான் நமக்கு அளிக்கிறது. ஆனால் கர்நாடக நீர் தேக்கங்களில் இருக்கக்கூடிய தண்ணீரின் அளவு என்பது 600 டி.எம்.சியாகும். தமிழ்நாட்டை விட மூன்று மடங்கு அதிகம். அதில் ஆறில் ஒரு பங்குதான் அவர்களுக்குக் காவிரியின் மூலம் கிடைக்கிறது.

கர்நாடகத்திற்கு மழை மூலமாக கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு 3,450 டி.எம்.சியாக இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டுக்கு மழை மூலமாகக் கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு 800 டி.எம்.சி. மட்டுமே. ஆக, தமிழ்நாட்டை விட நான்கு மடங்கு அதிகமான மழைநீரைக் கர்நாடகம் பெறுகிறது. கர்நாடகத்தின் மக்கள்தொகை 6 கோடி. தமிழ்நாட்டின் மக்கள்தொகையோ 8 கோடி. தண்ணீரை மிக அளவில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புள்ள மாநிலமாகக் கர்நாடகம்தான் உள்ளது. அவர்களுக்குக் காவிரியில் உரிமை மறுக்கப்படவும் இல்லை. எனவே தமிழ்நாட்டின் உரிமையை மறுத்து, நம்மிடமிருந்து தண்ணீரைப் பிடுங்கிக்கொண்டு போய் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் எங்கிருந்து வருகிறது?

அறிவியல் பூர்வமாகப் பார்த்தால் வட கிழக்குப் பருவமழை மூலமாகக் காவிரி டெல்டாவுக்கு கிடைக்கிற தண்ணீர் நிலத்தடி நீராக மாறுவது கிடையாது. ஏனென்றால் காவிரி டெல்டா பகுதியின் நிலப்பரப்பில் கடும் பாறைகள் இருக்கின்றன. அதனால்தான் இந்த மழைநீர் நிலத்தடி நீராக மாறுவதில்லை. இதை நாங்கள் சொல்லவில்லை. 1969ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு ஆய்வு சொல்கிறது. காவிரி டெல்டா பகுதியில் நிலத்தடி தண்ணீர் எப்படிச் சேருகிறது என்றால் காவிரியில் நீர் பாய்ந்து பாறை இடுக்குகளில் ஊடுருவி அதன்வழியாக நீர்த் தொகுப்பில் சேருகிறது. ஆனால் தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியின் நிலத்தடி நீரின் அளவு 20 டி.எம்.சியாக உள்ளது. அதிலிருந்து 10 டி.எம்.சியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் சொல்கிறது. இது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்?

இதிலே சுனாமிக்குப் பிறகு கிட்டத்தட்ட 770 சதுர கிலோமீட்டர் காவிரி டெல்டாவுடைய நிலப்பரப்பு கடல்நீர் புகுந்து உவர்நீராக மாறியிருக்கிறது. இதனால் திட்டமிட்டு உச்ச நீதிமன்றம் நம்மை வஞ்சித்திருக்கிறது. கர்நாடகாவின் பெங்களூருக்கு நாங்கள் தண்ணீரை ஒதுக்குகிறோம் என்றும் சொல்கிறார்கள். பெங்களூரு இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் பங்களிப்பை செலுத்துகிறது என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் காவிரி தமிழ்நாட்டுக்குள் நுழையும் கிருஷ்ணகிரியிலிருந்து சேலம், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சை, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கும்பகோணம் என்று பல்வேறு நகரங்கள் காவிரி நீரை நம்பித்தான் வளர்ந்து நிற்கின்றன. இந்த நகரங்கள் அனைத்துமே பொருளாதார வளர்ச்சியைக் கொண்டவைதான். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை முடிவு செய்பவையாகவும் உள்ளன. ஆனால் இந்த நகரங்களுடைய தண்ணீர் தேவையை உச்ச நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இதுமட்டுமல்ல, புதுச்சேரிக்கும், சென்னைக்கும் இங்கிருந்துதான் தண்ணீர் கிடைக்கிறது. சென்னையின் பொருளாதார பங்களிப்பு என்பது இந்தியாவுக்கு மிக முக்கியமானது. இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவின் நட்பு நாடு என்று சொல்லுகிறார்களே இனப்படுகொலை செய்த இலங்கை நாட்டின் பொருளாதார அளவை விட சென்னையின் பொருளாதார அளவு மிக அதிகம். இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியை (ஜிடிபி) விட சென்னையின் உள்நாட்டு உற்பத்தி அதிகம். நம்முடைய வலிமை நமக்குத் தெரியவில்லை என்பதுதான் நமக்குப் பிரச்சினை. தமிழ்நாடு நினைத்தால் இந்தியப் பொருளாதாரத்தை முடக்க முடியும் என்று நாங்கள் திரும்பத் திரும்ப சொல்வதன் அர்த்தம் இதுதான். தமிழ்நாட்டின் பொருளாதாரம் தமிழர்களின் இறையாண்மைக்குள் இருக்குமென்றால் இந்தியாவின் பொருளாதாரம் முறிந்துபோகும்.

1947க்குப் பிறகு தமிழ்நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு சிதைக்கப்பட்டது என்பதை நீரின் பங்களிப்போடு சேர்த்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. இது இரண்டும் பிரிக்கக்கூடிய காரணிகள் அல்ல. தண்ணீர் இல்லையென்றால் எந்தப் பொருளாதார வளர்ச்சியும் கிடையாது. அதனால்தான் காவிரியில் மறுக்கப்படுகின்ற நீரை தமிழ்நாட்டின் பொருளாதாரத்தோடு இணைத்துப் பார்க்கிறோம். விவசாயத்தின் முக்கியத்துவம் காவிரி நீரைக் கொண்டுதான் இருப்பதுபோல இந்தக் காவிரி கரையோரம் இருக்கக்கூடிய 19 மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியையும் இதை நம்பித்தான் இருக்கிறது. நாம் இதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒருபுறத்தில் இந்தியாவினுடைய ஆரிய வெறி நம்மை அழித்துக் கொண்டிருக்கிறது. மறுபுறத்தில் தனியார்மயத்தை தமிழின அழிப்புக்குப் பயன்படுத்த முடியுமென்றால் அதையும் நம்மை அழிக்கப் பயன்படுத்துகிறது இந்திய அரசு. 1955ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரப் பங்களிப்பில் விவசாயத்தின் பங்களிப்பு என்பது 52 விழுக்காடு. ஆனால் 2004ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரப் பங்களிப்பில் விவசாயத்தின் பங்களிப்பு வெறும் 15 விழுக்காடுதான். ஆனால் இன்னும் தமிழ்நாட்டு மக்களில் 50 விழுக்காட்டினர் கிராமத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். பசுமைப் புரட்சி என்ற செயற்கை விவசாய முறையைக் கொண்டுவந்த பிறகு விவசாய முறையில் பெரும் மாறுதல் வந்துள்ளது என்பது மட்டுமல்ல, விவசாயத்தின் பொருளாதார செழிப்பும் அழிக்கப்பட்டுள்ளது. அதோடு இணைத்துத்தான் நாம் தண்ணீரின் பயன்பாட்டைப் பார்க்க வேண்டும்.

**செய்தி தொகுப்பு : ர. பிரகாசு**

**(தொடரும்)**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கவுரி லங்கேஷ் கொலையாளிகள் பிடிபட்டனர்

# குற்றப் பத்திரிகையில் அதிர்ச்சித் தகவல்கள்

*பெங்களூரில் சுட்டுக் கொல்லப்பட்ட இந்துத்துவ எதிர்ப்பாளரும் பத்திரிகையாளருமான கவுரி லங்கேஷ் – அவரது இந்து எதிர்ப்பு கருத்துகளுக்காகவே சுடப்பட்டார் என்று சிறப்புப் புலனாய்வுக்குழு குற்றப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளது.*



இந்த கொலை தொடர்பாக நவீன் குமார் மற்றும் அவரது மத்தூரைச் சேர்ந்த கூட்டாளிகள் மூன்று பேரை சிறப்புப் புலனாய்வுக் குழு கைது செய்துள்ளது. நீதிபதி முன் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளனர். ஆனால் இந்த ஒப்புதல் வாக்குமூலம் சிறப்புப் புலனாய்வுக் குழு வேண்டுகோள்படி வெளியிடப்படவில்லை. இது வெளியிடப்பட்டால் தேடப்படும் குற்றவாளிகள் தப்பிவிடக் கூடும் என்பதுதான் காரணம். கைது செய்யப்பட்ட நவீன்குமார் என்பவர் எந்த அமைப்பைச் சார்ந்தவர் என்பது குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் அவரது மனைவி சி.என்.ரூப்பா, சிறப்பு புலனாய்வுக் குழுவிடம் தந்த வாக்குமூலத்தில் தனது கணவர் 'சந்தான் தர்ம சன்ஸ்தா' என்ற அமைப்போடு தொடர்புடையவர் என்று கூறியிருக்கிறார்.

"2017 ஆம் ஆண்டு இந்த அமைப்பு நடத்திய 'சிவாமோக்கா' என்ற நிகழ்ச்சிக்கு என்னை எனது கணவர் அழைத்துச் சென்று அமைப்பின் பிரமுகர்களை என்னிடம் அறிமுகப் படுத்தினார். தசரா பண்டிகைக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு துப்பாக்கியையும் துப்பாக்கிக் குண்டுகளையும் வாங்கினார். ஏன் இதை வாங்குகிறீர்கள் என்று நான் கடிந்து கொண்டபோது, 'இது வெத்துக் குண்டுகள்; குரங்குகளை விரட்டுவதற்காக வாங்கினேன்' என்று சமாதானம் கூறினார். தசரா பண்டிகையின்போது துப்பாக்கிக்கு பூஜை போட்டார். 'சந்தான் தர்ம சன்ஸ்தா' அமைப்பிலிருந்து ஒருவரை எனது கணவர் வீட்டுக்கு அழைத்து வந்தார். ஒரு நாள் இரவு முழுதும் தங்கியிருந்தார். கோவாவை மய்யமாகக் கொண்டு செயல்படும் இந்த அமைப்பின் 400 'இந்து' செயல்பாட்டாளர்களில் தன்னையும் ஒருவராக தேர்வு செய்யப்பட் டுள்ளதாக என்னிடம் கணவர் கூறினார். அந்த நிகழ்ச்சிக்கு அவர் கோவா போனார். பிறகு இரண்டு மாதங்கள் கழித்து அதேபோல 'ஷீப்பாள்ளி'யில் நடந்த ஒரு கூட்டத்திலும் பங்கேற்றார். ஒரு கட்டத்தில் மங்களூரில் 'சாந்தம் ஆசிரமத்தில்' நடந்த ஒரு நிகழ்ச்சிக்கு முன் பதிவு செய்து என்னை அழைத்துப் போனார். ஆசிரமத்துக்குச் சென்ற அடுத்த நாள் தொலைக் காட்சியில் கவுரி லங்கேஷ் படுகொலை செய்யப்பட்ட காட்சியைப் பார்த்தேன்" என்று குற்றம்சாட்டப்பட்டவரின் மனைவி கூறியுள்ளார்.

சந்தான் டாட் ஓஆர்ஜி (Santan.org) என்ற இணைய தளப் பதிவு சோதனைக்குட்படுத்தப்பட்டு (Forensic Report) குற்றப் பத்திரிகையில் இணைக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதி மத்தூரில் கொலைக்காக நடந்த திட்டமிடல் கூட்டம் பற்றிய தகவல்கள் இந்த இணையதளத்தில் பதிவாகியுள்ளது. இதில் நவீன்குமார் கலந்து கொண்டதாக புலனாய்வுத் துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

புலனாய்வுக்குழுவின் 651 பக்க குற்றப் பத்திரிகை, "கவுரி இந்து தர்மத்துக்கும், இந்து கடவுளுக்கும் எதிராகப் பேசியதால், இந்து தர்மத்தைப் புண்படுத்தியதாக நவீன் கடும் கோபத்தில் இருந்தார்" என்று குறிப்பிடுகிறது. குற்றம் சாட்டப் பட்டுள்ள நவீன்குமாரின் மனைவி ரூபா 'பிரூர்' என்ற பகுதியில் அரசுத் துறையில் 'குரூப் டி' பிரிவு ஊழியராகப் பணியாற்றுகிறார். குற்றப் பத்திரிகையில் குற்றம் சாட்டப் பட்டவர் சார்ந்துள்ள அமைப்பு பற்றி குறிப்பிடப்படவில்லை. காரணம் அந்த அமைப்பே இந்த கொலை சதியில் ஈடுபட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை" என்று ஒரு மூத்த காவல்துறை அதிகாரி கூறியுள்ளார்.

அமைப்பே சதி செய்தது என்ற குற்றச்சாட்டை நிரூபிப்பது மிகவும் கடினம். அமைப்பே சதித் திட்டம் தீட்டியதற்காக ஆதாரங்களை சமர்ப்பித்தாக வேண்டும். எந்த அமைப்பும் தீர்மானம் போட்டு இத்தகைய சதிகளை நிறைவேற்றுவது இல்லை. இதை ஒரு சாக்காக வைத்து குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பி விடுவார். காந்தி கொலை வழக்கில் கோட்சே - ஆர்.எஸ்.எஸ்.காரர் என்று குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்படாததற்கும் இதுவே காரணம். பா.ஜ.க.வினர் இதைத்தான் கோட்சே ஆர்.எஸ்.எஸ். காரர் அல்ல என்ற தங்களின் வாதத்துக்கு ஒரு சான்றாகக் கூறி வருகிறார்கள். கவுரி லங்கேஷ் இந்து தர்மத்தை எதிர்த்ததால் தான் கொல்லப்பட்டார்" என்று குற்றப் பத்திரிகை கொலைக்கான நோக்கத்தைக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தபோல்கர், கல்புர்கி, பன்சாரே, கவுரி லங்கேஷ் என்று இந்துத்துவத்தை எதிர்க்கும் பகுத்தறிவாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகளில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளும் ஒரே தன்மையில் இருப்பது கண்டறியப்பட்டது. இப்போதுதான் கவுரி லங்கேஷ் கொலையில் முதன்முதலாக குற்றவாளிகள் கண்டறியப்பட்டு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் கட்டத்துக்கு வழக்கு வந்திருக்கிறது.

## தூத்துக்குடி படுகொலை-வேல்முருகன் கைதைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்



**மேட்டூரில் :** தூத்துக்குடி படுகொலைகளைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 23.5.2018 அன்று மேட்டூர் பெரியார் பேருந்து நிலையம் முன்பு சேலம் மேற்கு மாவட்டம் சார்பில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு தலைமை தாங்கினார். இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நகர செயலாளர் அப்துல்கபூர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருப்பண்ணன், சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கோ. சூரியக்குமார், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்டச் செயலாளர் மோகன்ராஜ், நாம் தமிழர்க் கட்சி நகர செயலாளர் மூர்த்தி, கழகத் தோழர் மா.சுந்தர் ஆகியோரின் கண்டன உரைகளைத் தொடர்ந்து இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன உரையாற்றினார். குமரேசன் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது. கூட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தோழர்களும் பொறுப்பாளர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.


**காஞ்சியில் :** திராவிடர் விடுதலைக் கழகம் காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் பாலாறு விவசாயிகள் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைந்து தூத்துக்குடி படுகொலையைக் கண்டித்தும், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் கைதினைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் 31.5.2018 மாலை 5 மணிக்கு காஞ்சி பெரியார் தூண் அருகே நடைபெற்றது. ரவி பாரதி திவிக தலைமையில் மு.டில்லி பாபு (பாலாறு விவசாயிகள் பாதுகாப்பு இயக்கம்) வரவேற்புரையாற்றினார். தோழர்கள் தினேஷ், செங்குட்டுவன், ஏழுமலை முன்னிலை வகித்தனர்.

கண்டன உரையாற்றியவர்கள் காஞ்சி அமுதன் (அமைப்பாளர் தமிழக எழுச்சி இயக்கம்), செந்தமிழ் குமரன் (அமைப்பு செயலாளர் தமிழ்த்தேச மக்கள் கட்சி), தீனன் (மாநில செயலாளர், தமிழக வாழ்வுரிமை கட்சி), சாஜகான் (காஞ்சி மாவட்ட தலைவர், தமுமுக), துரை அருண் (திவிக, வழக்கறிஞர் சென்னை உயர் நீதிமன்றம்), பாசறை செல்வராஜ் (நாடாளுமன்ற தொகுதி செயலாளர் விசிக), மகேஷ் (காஞ்சி மாவட்ட இளைஞர் அணி செயலாளர் மதிமுக), உமாபதி (சென்னை மாவட்ட செயலாளர் திவிக), கொண்டல் (மே17 இயக்கம்), தஞ்சை தமிழன் (மக்கள் மன்றம்), ஆ.மோகன் (பாலாறு பாதுகாப்பு கூட்டியக்கம்), தாண்டவ மூர்த்தி (தன்னாட்சி தமிழகம்), வெற்றித் தமிழன் (பாலாறு விவசாயிகள் பாதுகாப்பு இயக்கம்), கழகத் தோழர் ராமஜெயம் நன்றியுரை கூறினார்.




**தற்போது விற்பனையில்**

**'நிமிர்வோம்' – மே 2018 இதழ்**




- சுயமரியாதையும் பொதுவுடைமையும் சிறப்புக் கட்டுரைகள்
- நீதிமன்றத்தால் விடுவிக்கப்படும் காவி பயங்கரவாதிகள்
- தமிழகத்தில் வைகுண்ட சாமிகள் நடத்திய வைதிக எதிர்ப்பு இயக்கம் – பேரா. அருணன்
- ஒவ்வொரு பெண்ணும் பெரியாராக... – ஜெய ராணி
- அலிகர் பல்கலையை வேட்டையாடிய காவிகள்
- பார்ப்பன மரபை எதிர்த்த உலகம் கொண்டாடும் நாட்டியக் கலைஞர்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 7th June 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN